பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: மார்கழி 9 (23—12—68) திங்கள் ★ வெளியூர்: மார்கழி 10 (24—12—68) செவ்வாய் [இதழ்: 157

பகுதிநேரக் கல்வி வசதி

ஐந்தாண்டுத்திட்டத்தில் வாய்ப்பு

புதுடில்லி, டிச. 23—

"படித்துக் கொண்டே சம்பாதிக்கும் பொருட்டு மேல் வகுப்புகளில் பகுதி நேரக் கல்வியைத் துவங்குவதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய அளவில் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும்"

என்று மத்திய கல்வி அமைச்சகம் யோசனை கூறியிருக்கிறது.

துவக்கக் கல்விக் கட்டத்தில் விரயத்தையும், தேக்க நிலையையும் குறைப்பதற்கான ஒரு திட்டத்தை அரசு வலியுறுத்தும்.

பதவி உயர்வுக்கு வாய்ப்பு!

தமிழக அரசில் ஏற்பாடு

சென்னை, டிச. 23—

துணைச் செயலாளர்கள் தகுதியிலுள்ள அதிகாரிகளுக்கு பதவி உயர்வு அளிப்பதற்காக, 'கூட்டுச் செயலாளர்' என்ற புதிய பதவியை அரசு ஏற்படுத்தியிருக்கிறது.

உலகத் தமிழ் மாநாட்டை நினைவுறுத்தும் ஊர்வலம்!

தமிழகம் முழுவதும் விழா நிகழ்ச்சிகள்

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு விழா ஏற்பாடு

குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி துவக்கி வைப்பார்

சென்னை, டிச. 23—

வாழ்க்கைநெறி வகுத்துத் தந்த வள்ளுவப் பெருந்தகையின் இரண்டாயிரமாவது ஆண்டு பிறந்த நாள் விழா வருகிற தை முதல் நாள் (1969 சனவரி 14) தொடங்குகிறது.

இந்த விழா தமிழகத்தில் ஒரு திங்கள் தொடர்ந்து நடைபெற ஏற்பாடாகிவருகிறது; இதற்கெனக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

விழாவை, பேரறிஞர் அண்ணா தலைமையில் -- இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு. வி. வி. கிரி துவக்கி வைப்பார்.

இவ்விழா முழுக்க முழுக்கத் தமிழக அரசின் உறுதுணையோடு நடைபெறும்.

விழாக் குழுத் தலைவராகத் தமிழவேள் பி. டி. இராசன் அவர்களும், துணைத் தலைவர்களாக முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், ம. பொ. சிவஞானம் ஆகியோரும் இருப்பர்.

வரவேற்புக் குழுத் தலைவராகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், கலைக் குழுத் தலைவராகப் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, பட்டிமன்றக் குழுத் தலைவராக அமைச்சர் மா. முத்துசாமி ஆகியோர் இருப்பார்கள்.

திருவள்ளுவரின் 2000-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாக் கொண்டாடுவது பற்றிய கருத்தறிவிப்புக் கூட்டம், கடந்த சனிக்கிழமையன்று மவுண்ட்ரோடிலுள்ள மாவட்டத் தலைமை நூலகக் கட்டிடத்தில் நடைபெற்றது.

திருவாளர்கள் கி. ஆ. பெ. விசுவநாதன், வ. சுப்பையாபிள்ளை, சலகை ப. கண்ணன் ஆகியோர் அமைப்பாளர்களாக இருந்து இந்தக் கூட்டத்தைக் கூட்டினர்.

கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இந்தக் கூட்டத்துக்குத் தலைமைவகித்தார். பலர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

விழாவை தை முதல் நாளிலிருந்து தொடங்கி தமிழகம் முழுவதிலும் ஒரு மாத காலத்துக்கு நடத்த வேண்டும் என்றும், உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலம் போன்று பல்வேறு துறையினரும் சமயத்தினரும் பங்கேற்கும் வகையில் நீண்ட ஊர்வலம் நடத்துவது சிறப்புமிக்கதாக இருக்கும் என்றும், விழாவையொட்டிப் பொருட்காட்சி ஒன்றை நடத்தலாம் என்றும் அமைச்சர் நெடுஞ்செழியன் கருத்துரை வழங்கினர்.

அனைவரது ஆய்வுரைகளையும் கேட்டுச் செயல்படுவதாகத் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் கூறினர்.

விழாத் தொடர்பாக மேலும் யோசனைகூற விரும்புவோர், 'மறைமலையடிகள் நூலகம், 105, லிங்கிச் செட்டி தெரு, சென்னை-1 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

அண்ணா இல்லத்தில் பொப்பிலி அரசர்

உடல்நலம் விசாரித்தறிந்தார்

சென்னை, டிச. 22—

முன்னாள் முதலமைச்சரும் நீதிக் கட்சித் தலைவருமான பொப்பிலி அரசர் இன்று மாலை 6 மணிக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் இல்லத்திற்கு வந்து, அண்ணா அவர்களின் உடல் நலம் விசாரித்தறிந்தார்.

சந்திரனைச் சுற்றிவரும் விண்வெளி வீரர்கள்

கேப் கென்னடி, டிச. 22—

மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 'அப்பாலோ 8' என்ற அமெரிக்க விண்வெளிக் கப்பல், சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. 'திட்டமிட்டபடி அது சென்றுகொண்டிருக்கிறது' என விண்வெளி அதிகாரிகளும், பாதுகாப்பாகத் தாங்கள் சென்றுகொண்டிருப்பதாக விண்வெளி வீரர்களும் தெரிவித்தனர்.

கேப் கென்னடியிலிருந்து புறப்பட்ட 30 மணி நேரத்திற்குள் அவ்விண்வெளிக் கப்பல், பூமியிலிருந்து 1,21,000 மைலில் இருந்தது; சந்திரனுக்குச் செல்ல வேண்டிய தூரம் 1,02,337 மைல்களாக மட்டுமே இருந்தது.

ஈர்ப்புசக்திக்கு அப்பாற்பட்ட விண்வெளியில், முதன் முதலா

(4-ம் பக்கம் பார்க்க)

ரூ. 90,000 செலவில் கடலரிப்புத் தடுப்பு

மீனவர்கள் நலனுக்கு ரூ. 35 இலட்சம்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அறிவிப்பு

நாகர்கோவில், டிச. 22—

"குமரி மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான வேலைகளில் ஈடுபடத் தமிழக அரசு தீவிரமாக முனைந்துள்ளது"

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் இங்கு தெரிவித்தார்.

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி மேலும் தெரிவித்ததாவது:—

"கடல் அரிப்புக் காரணமாக இங்கு பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்குத் தமிழக அரசு வீடு கட்டும் மனைகள் அளிக்கவிருக்கிறது.

மற்றும் அவர்களுடைய சீரமைப்புக்கும் தமிழக அரசு உதவிகள் செய்ய முனைந்திருக்கிறது.

பள்ளம்துறையில் கடல் அரிப்பைத் தடுப்பதற்குக் கட்டற்கரை நெடுகிலும் பாதுகாப்புச் சுவர்கள் அமைப்பதற்கான வேலைகளுக்குத் தமிழக அரசு ரூ. 90,000 அனுமதித்திருக்கிறது.

கன்னியாகுமரி கடற்கரை வழியே நெடுஞ்சாலை ஒன்று அமைப்பது பற்றியும் அரசு யோசனை செய்துவருகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மீனவர்கள் நலன்கள் பற்றிய சீரமைப்பு வேலைகளுக்காக ரூ. 35-இலட்சம் செலவிடுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்த ரூ. 35-இலட்சத்தில் சாலைகள் அமைப்பதற்கென ரூ. 25 இலட்சம் செலவிடப்படும்; எஞ்சியுள்ள தொகைமூலம் மீனவர்களின் வீட்டு வசதிக்கான வேலைகள் மேற்கொள்ளப்படும்."

நாகர்கோவில் தொகுதியில் காங்கிரசார் காலித்தனம்

அமைச்சர் ஏ. கோவிந்தசாமி காரை வழிமறித்தனர்

நாகர்கோவில், டிச. 22—

நாகர்கோவில் நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றிருந்த வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் காரை வழிமறித்துக் காங்கிரசுக் காலிகள் கலவரம் செய்தனர். போலீசார் உடன் விரைந்து வந்து அமைதி ஏற்படுத்தினர்.

நேற்று அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் குமரி மாவட்டம் கொல்லங்கோடு சடற்கரைப் பகுதியில் மீனவர்களிடம் ஓட்டுக் கேட்டார்.

பின்பு, அவர் வல்லவிளை சென்றார்; அங்கு அமைச்சர் கோவிந்தசாமி அவர்களுக்கு மக்கள் சிறப்புமிகு வரவேற்பளித்தனர். அங்குள்ள தாய்மார்கள் பலர் அமைச்சரிடம், 'ரேஷன் கடைகளில் அரிசி வாங்கச் சென்றால், காங்கிரசுக்கு ஓட்டுப் போடுவதாக இருந்தால்தான் அரிசி போடுவோம்' என்று கூறுவதாகப் புகார் செய்தனர்; இதுபற்றிக் கவனிப்பதாக அமைச்சர் கூறினர்.

பின்னர் அவர், மார்த்தன் துறையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசினர். இரவு 9-மணிக்கு அவர் அங்கிருந்து காரில் செல்லும்போது ஒரு லாரியில் காங்கிரசுக் காலிகள் வந்து அமைச்சரின் காரை வழிமறித்துக் கலவரம் செய்து மேலும் போகவிடாமல் தடுத்தனர்.

இதுபற்றிப் போலீசார் தகவல் அறிந்ததும் அந்த இடத்திற்கு விரைந்து வந்து அமைதி ஏற்படுத்தினர்.

பின்னர் அமைச்சர், காரில், நம்பள்ளி என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார்; அங்கு அவருக்கு மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர்.

அக்கூட்டத்தில் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"நான் இந்தக் கூட்டத்திற்கு வரும்போது காங்கிரசுக்காரர்கள் என் காரை வழிமறித்துக் கலவரம் செய்தது குறித்து எவரும் ஆத்திரப்பட வேண்டாம்; வன்முறை, என்றும் வெற்றியைத் தராது; வன்முறையால் நம்மில் எவரும் ஆத்திரப்பட்டு அவர்கள் வழியில் செல்ல வேண்டாம்; பலாத்கார வழியில் அவர்களே செல்லட்டும்; அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறிவருவதுபோல், நாம் பொறுமையாக இருந்து பொது மக்கள் நல்லாதரவைப் பெறுவோம் -- வெற்றி பெறுவோம்."

வாக்காளர் பட்டியலில் புதிய ஏற்பாடு

கல்கத்தா, டிச. 22—

"இடைத் தேர்தல்கள் முடிந்தபின், 'திறந்த வாக்காளர் பட்டியல்' ஏற்பாட்டை செயலாக்குவது பற்றிய திட்டத்தை மத்திய அரசிடம் அளிக்கப் போகிறேன்"

என்று, தலைமைத் தேர்தல் ஆணையர் சென் வர்மா, நிருபர்களிடம் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

"இத்தகைய பட்டியலின் நோக்கம், மக்கள் தங்களது பெயர்களைச் செலவு ஏதுமின்றி பட்டியலில் சேர்த்துக்கொள்ள வகை செய்வதேயாகும்; இத்தகைய ஏற்பாடு ஆசியாவிலேயே இது முதலாவதாகும்."

இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1999 மார்கழி 9 (23—12—68) திங்கள்

பதவிப் போராட்டக் கூத்து!

அரசியல் கட்சிகள் சில ஒன்ருக இணைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால், அந்த ஆட்சி நீடித்து நிலைத்து நிற்காது என்பது, காங்கிரசுக் கட்சித் தலைமையின் குற்றச்சாட்டு. இக்குற்றச்சாட்டை மெய்ப்பிக்கின்ற முறையிலும் வலியுறுத்துகின்ற முறையிலும், உத்தரப் பிரதேசம் - பீகார் - மேற்கு வங்கம் முதலிய இடங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பல கட்சிகளைக் கொண்ட கூட்டணி அரசுகள் கவிழ்ந்துபோனதை காங்கிரசுத் தலைமை சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறது.

இப்பொழுதும்கூட, மத்தியப் பிரதேச ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற கூட்டணிக் கட்சியினரின் அரசைக் குறித்து நாள்தோறும் வருகின்ற செய்திகளைச் சுட்டிக்காட்டி, பல கட்சிகளைக் கொண்ட கூட்டணியால் ஆட்சியை நடத்த முடியாது எனக் கொக்கரித்துக்கொண்டிருக்கின்றது காங்கிரசுத் தலைமை.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளைக்கொண்ட அரசியல் கட்சிகள், கூட்டாக இணைந்து ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகின்றபொழுது, அக்கட்சிகளிடை கருத்து மோதல் ஏற்பட்ட இடமிருக்கிறது : அம்மோதுதல் காரணமாக கூட்டணி அமைத்திருக்கின்ற அரசியல் கட்சிகளுக்குள்ளாகக் குழப்பமும், பிணக்கும் பகையும் மூளுவதற்கு இடமிருக்கிறது ; அதன் பலனுக கூட்டணி ஆட்சி கவிழ்ந்துவிடுகின்ற அபாயம் எப்பொழுதும் நிலையாக இருந்துகொண்டிருக்கிறது ; எனவே, பல அரசியல் கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஆட்சியினுல், நிர்வாகத்தை நடத்தமுடியாது—மக்களின் தேவைகளை நிறைவு செய்யவும் முடியாது.

இப்படிக் காங்கிரசுத் தலைமை, பல அரசியல் கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஆட்சியைப் பற்றிப் பிரசாரம் செய்துவருவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது.

'கூட்டணி அமைத்திருக்கின்ற கட்சிகட்குத் தனித்தனியாகக் கொள்கைகள் உண்டு; அக்கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பவைகள் ; எனவே, அம்முரண்பாடுகளின் பலனுக அக்கட்சிகளுக்குள்ளாக மோதுதல் ஏற்பட்டு இறுதியில் கூட்டணி ஆட்சி கவிழ்ந்து போகும்' எனக் கூட்டணி ஆட்சி அமைப்பைக் குறித்து இலக்கணம் வகுத்துக் காட்டுகின்ற அதே காங்கிரசுத் தலைமை, 'கூட்டணியில் இடம் பெற்றிருக்கின்ற அரசியல் கட்சிகளுக்குக் கொள்கை எதுவும் கிடையாது -- மக்கள் நல்வாழ்வில் அக்கறை கிடையாது — தொழில் வளர்ச்சியில் கருத்துக் கிடையாது—ஊழலற்ற நிர்வாகத்தை உருவாக்க வேண்டுமே என்ற கவலை கிடையாது—இருக்கின்ற கவலையெல்லாம் பதவியில் எப்படியும் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்கின்ற ஒரே குறிக்கோள்தான்' என்றும், முன்னுக்குப்பின் முரண்பட பிதற்றிக்கொண்டும் இருக்கிறது.

'மாநிலங்களில் கவிழ்ந்துபோன' என்பதைவிட, தன்னுல் கவிழ்க்கப்பட்டுவிட்ட கூட்டணிக் கட்சிகளின் ஆட்சிகளைச் சான்ருகக் காட்டி, 'காங்கிரசுக் கட்சி ஒன்றினுல்தான் நிலையான ஆட்சியை—மக்கள் நலம் நாடும அரசை அமைத்திட முடியும்' என ஓலம்—இல்லை—முழக்கமிட்டுக் கொண்டிருக்கிறது காங்கிரசுக் கட்சித் தலைமை.

காங்கிரசுக் கட்சித் தலைமை ஓலமிட்டுக்கொண்டிருப்பது போல, காங்கிரசுக் கட்சியினுல் மட்டும் நிலையான ஆட்சியை -- மக்களுக்கு நல்வாழ்வு தேடித் தரக்கூடிய ஆட்சியை அமைத்திட முடிகிறதா என்ற கேள்வி எழுவது இயல்பேயாகும். இந்த நியாயமான கேள்விக்குக் காங்கிரசுத் தலைமை வைத்திருக்கின்ற பதில் என்ன ? கூறக்கூடிய விடை என்ன ?

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் காங்கிரசுக் கட்சிதான் அரியானு மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. சில திங்களுக்கெல்லாம் காங்கிரசு ஆட்சி கவிழ்ந்துபோயிற்று. பின்னர், காங்கிரசுக் கட்சியிலிருந்து வெளியேறிய சிலரைக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு ராவ் வீரேந்திர சிங் என்பவரை முதலமைச்சராகக் கொண்ட கூட்டணி ஆட்சி அமைந்தது. அதுவும், சில திங்கள் கழிந்ததும் கவிழ்ந்துபோயிற்று.

அதற்குப் பின்னர் இடைத் தேர்தல் நடைபெற்றது. முறையற்ற முறையிலெல்லாம் பெருமுயற்சி செய்து காங்கிரசுக் கட்சி மிகுதியான தொகுதிகளில் வெற்றி பெற்று, பான்சிலால் என்ற காங்கிரசுக்காரரை முதலமைச்சராகக்கொண்டு அரியானு ஆட்சிப் பீடத்தைக் காங்கிரசுக் கட்சி கைப்பற்றிக்கொண்டது.

இந்த அமைச்சரவை உருவெடுத்ததிலிருந்தே அதன்மீது காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சிலருக்கு, அதிருப்தி தலைகாட்டி வளர்ந்துகொண்டுவந்தது. காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்களில் கணிசமானவர்கள் காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகிக்கொண்டதாக அறிவித்தனர். இப்படி வெளியேறியவர்களின் நம்பிக்கைக்கு உரியவராக உள்ளவர் பகவத் தயாள் சர்மா என்பவராவார்.

முதலமைச்சர் பதவியிலிருந்து பான்சிலால் அவர்களை வெளியேற்றிவிட வேண்டும் என்பதுதான், பகவத் தயாள் சர்மா அவர்களின் கோரிக்கை. அக்கோரிக்கையைத்தான் கங்கிரசுக் கட்சியைவிட்டு விலகிவிட்டதாக ஏற்கனவே அறிவித்திருந்த காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்களும் வலியுறுத்தி இருந்தனர்.

அரியானு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள பான்சிலால் அவர்களும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்தான். அவரை அப்பதவியிலிருந்து விரட்ட வேண்டும் எனத் தீவிரமாகக் கோரிக்கொண்டிருந்த பகவத் தயாள் சர்மா அவர்களும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்தான். சர்மா அவர்களைப் பின்பற்றி, முதலமைச்சர் பான்சிலாலை வெளியேற்ற விரும்பியவர்களும் காங்கிரசுக் கட்சியினர்தான் !

காங்கிரசுக் கட்சிக்குள்ளாக அதிலும் பொறுப்பு வாய்ந்த காங்கிரசுக் கட்சியினருக்குள்ளாக—இந்தக் குழப்பமும் -- பிணக்கும் -- பிளவும் -- அடிப்படைக் கொள்கைக் காரணமாக இருந்திட நியாயமில்லை. கொள்கையில் வேற்றுமை இல்லை என்ருல், பதவியைப் பெறுவதில் போட்டி -- பூசல் என்பது வெளிப்படையாகத் தெரிகின்ற உண்மையாகும்.

பதவிக்காகத் தங்களுக்குள்ளாக அடித்துக்கொள்ளுகின்றவர்களைக்கொண்ட காங்கிரசுக் கட்சி, அரசியல் கட்சிகள் பல இணைந்த கூட்டணி ஆட்சிக்குக் கொள்கை கிடையாது என்றும், பதவியைப் பற்றிக்கொள்ளுவதுதான் அக்கட்சியின் அரசியல் குறிக்கோள் என்றும் பேசுவதை, வெறும் அரசியல் பிதற்றல் என்றுதானே கொள்ள வேண்டும் ? இம்முடிவை எப்படித் தவறுடையது என்று சொல்லமுடியும் ? பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பதுதான் காங்கிரசுக் கட்சியின் ஒரே இலட்சியம்—அரசியல் குறிக்கோள் என்ற உண்மையை உறுதிசெய்ய அரியானுவில் இன்றும் முற்றுப் பெருது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பதவிப் போராட்ட அரசியல் கூத்தே போதிய சான்ருகும்.

— கா. க.

'நிர்வாக இயந்திரம் திறமையுடன் இயங்குவது அவசியம்'

'பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கக் கூடாது'

'பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது துரிதமாக முடிவு காண்பதில் தாமதத்தைத் தவிர்த்தாக வேண்டும்'

அரசு அதிகாரிகள் --- ஊழியர்கள் கடமை பற்றி தமிழக ஆளுநர் உஜ்ஜல் சிங்

சென்னை, டிச. 22—

"மாவட்ட மட்டத்தில் அல்லது இலாகா அதிகாரிகள் தீர்க்கக் கூடிய சிறிய குறைகளுக்குப் பரிகாரம் காண்பதற்காகப் பொது மக்கள் தங்களுடைய நேரத்தையும் பணத்தையும் செலவழிப்பதுடன், அமைச்சர்களின் நேரத்தையும் வீணுக்குகின்றனர் ; ஆகவே அதிகாரிகள், தங்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கக் கூடாது.

"குறைகளைத் தீர்க்கக் கோரிப் பொதுமக்களிடமிருந்து வரும் மனுக்களைத் திறம்பட மிகத் துரிதமாக முடிவு செய்வது அவசியமாகும் ; இதில் தாமதம் ஏற்பட்டால், ஊழல்கள் பெருக வழி ஏற்பட்டுவிடுகிறது ; எனவே, நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்தி விரைவாக நற்பலன்களைக் காண வேண்டுமானுல், அத்தகைய தாமதங்களைத் தவிர்த்தே ஆகவேண்டும் ; இத்துறையில் நிர்வாக இயந்திரம் திறமையாக இயங்க வேண்டியது மிக அவசியமாகும் ; காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு இலாகா அதிகாரிகள், மிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

"வளர்ச்சியடைந்துள்ள நாடுகளைவிட நம் நாட்டில் ஓய்வு நாட்கள் அதிகம் ; பணியாற்றும் நேரம் குறைவு ; கடமை, நாட்டுப்பற்று ஆகிய உணர்வுகளுடன் உற்சாகமாகவும் கடமையாகவும் உழைத்தால்தான் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குச் சமமான நிலையை நாம் அடைய இயலும் ; இத்துறையில் அதிகாரிகள் முன்வந்து ஊழியர்களுக்கு வழிகாட்ட வேண்டும்"

இவ்வாறு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், இந்தியப் பொது நிர்வாகக் கழக சென்னைக் கிளையின் ஆதரவில் நடைபெற்ற தென் வட்டாரக் கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினர்.

அரசு ஊழியர் பற்றிய இரகசிய குறிப்பு முறை

அரசு ஊழியர்களைப் பற்றிய இரகசியக் குறிப்புப் பதிவேட்டு முறையை ஒழித்துவிட வேண்டுமெனச் சிலர் வற்புறுத்துவது பற்றி ஆளுநர் குறிப்பிட்டுக் கூறியதாவது :—

"அரசு ஊழியத் திறமையைப் பாதிக்கும் அளவில், தற்போதைய முறையில் மாறுதல் ஏதும் செய்யக்கூடாது ; பாரபட்சமின்றி அத்தகைய குறிப்புப் பதிவு ஏடுகள் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

"ஊழியர்களைப்பற்றி ஓர் அதிகாரி தயாரிக்கும் இரகசியக் குறிப்புப் பதிவு ஏடு, கண்கூடான நோக்குடன்-- நேர்மையானதாக இருக்கவேண்டும்; ஓர் ஊழியரின் வேலை--நடத்தை பற்றி அடுத்தடுத்து வந்த மேலதிகாரிகளின் குறிப்புக்களைச் சீர்தூக்கிப் பார்த்துத்தான், அந்த ஊழியரின் பதவி உயர்வுப் பிரச்சினை ஆராயப்படுமென நினைக்கிறேன்.

விவசாயத் துறையில் விரைவில் பலன்காண--

"விவசாயத் துறையில் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலம் இது ! விவசாயிகளுக்குக் கூடுதல் விலையில் தரக்கூடிய விதைகள், இரசாயன எருக்கள், கடன் தொகைகள் ஆகியனவற்றை அளிப்பதில், அரசு நிர்வாக இயந்திரம் எந்தவிதச் சுணக்கத்தையும் காட்டக் கூடாது.

"நடைமுறை விதிகளைச் சுலபமாக்கினுல், விவசாயத் துறையில் விரைவில் நல்ல பலன்களைக் காண இயலுமென நம்புகிறேன்."

இருபுறமும் குறியிடும் ரப்பர் ஸ்டாம்பு

நாகர்கோவில் தேர்தலில் பயன்படுத்தப்படும்

நாகர்கோவில் இடைத் தேர்தலில் முதல் தடவையாக வாக்குச் சீட்டுகளில் குறியிடுவதற்காக 'ரப்பர் ஸ்டாம்பு'களின் இருபுறமும் பெருக்கல் குறி இருக்கும்.

இதுவரை 'ரப்பர் ஸ்டாம்பு'களின் ஒருபுறம்தான் இத்தகைய குறி பொறிக்கப்பட்டிருந்தது. விவரம் அறியாத வாக்காளர்கள் சிலர், குறியில்லாத பக்கத்தைக் கொண்டு வாக்குச் சீட்டுகளில் பதிவு செய்ததால், வெறும் மை அதில் பதிவாகி செல்லாததாகியது.

ஆகவே, இத்தவற்றைத் தவிர்க்க இந்த மாறுதலைத் தேர்தல் குழு செய்துள்ளது.

ரப்பர் ஸ்டாம்பின் இருபுறத்தையும் வாக்குச் சீட்டில் பதிவு செய்ய வாக்காளர் பயன்படுத்தலாம்.

நிலமற்றவர்கட்குப் புறம்போக்கு நிலம்

இவ்வாண்டில் 50,000 ஏக்கர் நிலம் வழங்கப்படும்

கடலூர், டிச. 22—

"நிலமில்லாதவர்களுக்கு இந்த ஆண்டில் 50,000 ஏக்கர் புறம்போக்கு நிலம் வழங்கப்படும்.

"தென்னுற்காடு மாவட்டத்தில் இதுவரையில் 6,000 ஏக்கர் புறம்போக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது"

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், தமிழ்நாட்டு 'ஆய்வு'த் துறையின் 100-வது ஆண்டு விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.

இதுவரை ரூ. 543 கோடி!

கானடாவிடம் இந்தியா வாங்கிய கடன்

புதுடில்லி, டிச. 22—

இந்தியாவுக்கு ரூ. 20.82 கோடி கடன் வழங்க வகைசெய்யும் இரண்டு ஒப்பந்தங்களில் கனடாவும்--இந்தியாவும் கையெழுத்திட்டன.

கனடாவிலிருந்து இரசாயன உரங்களையும், மற்றப் பொருள்களையும் வாங்க இந்தக் கடன்கள் பயன்படுத்தப்படும்.

இன்றைய ஒப்பந்தங்களைச் சேர்த்து கனடா இந்தியாவுக்கு ரூ 26.37 கோடி கடன் கொடுத்துள்ளது.

இத்துடன் 1968-69-ல் இந்தியாவுக்கு தருவதாக உறுதி அளித்த உதவித் தொகையைக் கொடுத்து விட்டது.

இந்தக் கடன்கள், 50 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் ; வட்டி கிடையாது.

இந்த ஆண்டில் கனடா, ரூ 27.76 கோடி மதிப்புள்ள கோதுமையை இந்தியாவுக்கு வழங்கியிருக்கிறது.

பழைய கடனைத் தீர்ப்பதற்காகவும், நுட்ப உதவிக்காகவும், விவசாயத் திட்டங்களுக்காகவும் ரூ. 4 16 கோடி வழங்கியிருக்கிறது.

இந்த ஆண்டு கனடா இந்தியாவுக்கு மொத்தம் ரூ. 69 4 கோடி உதவியளித்திருக்கிறது.

இப்போது செய்துகொள்ளப்பட்டுள்ள கடன் ஒப்பந்தங்களுடன் சேர்த்து கனடா இதுவரையில் மொத்தம் ரூ. 543.54 கோடி உதவியளித்திருக்கிறது.

சில கோடி செலவிட்டால் பல கோடி பயன் உண்டு

ஆராய்ச்சிக்குச் சிறப்பிடம் தருவது அவசியம்

புதுப் புதுக் கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கம் அளித்திட வேண்டும்

திரைப் படத் தொழில் நுணுக்கப் பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ஆய்வுரை

சென்னை, டிச. 22—

"நமது நாட்டில், ஆராய்ச்சிக்கென்று செலவிடப்படுவதே இல்லை; ஆராய்ச்சிக்கான வசதியும் வாய்ப்பும் இல்லை; இதன் காரணமாகப் புதிய கண்டுபிடிப்புக்கள் அரிதாக உள்ளன; பிற நாடுகளைப் பார்த்துத்தான் நாம் 'கற்றுக்கொள்பவர்'களாக இருக்கிறோமே தவிர, பிறருக்கு நாம் 'கற்றுக்கொடுப்பவர்'களாக வர முடிவதில்லை!

"இந்த நாட்டில் விஞ்ஞானிகள்கூட அதிகம் வளராததற்குக் காரணம், 'தலைமையிடத்தில் உள்ளவர்கள் தங்களின் கீழுள்ள தகுதி வாய்ந்த இளைய தலைமுறையினரை வளரவிடாமல் செய்வதுதான்' என்ற ஒரு கருத்துக்கூடச் சொல்லப்படுகிறது; இந்த நிலை மாற வேண்டும்; 'நாம் வாழவேண்டும் -- மற்றவரையும் வாழ விட வேண்டும்' என்ற கொள்கையை வல்லுநர்கள் பின்பற்ற வேண்டும்"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

அடையாற்றில் உள்ள அரசாங்கத் திரைப் படத் தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்று பட்டம்பெற்றுச் செல்லும் 21 மாணவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்களை (சர்டிபிகேட்) கல்வி அமைச்சர் வழங்கினார்.

கல்வித் துறை -- தொழில் துறைக்கென்றுகூடப் போதுமான ஆராய்ச்சி செய்யப்படாததைக் கண்டு அமைச்சர் வருந்தினார்; 'ஆராய்ச்சிக்கென்று இப்போது சில கோடி ரூபாய்களை நாம் கரைத்தாலும், உலகில் புதிய கண்டுபிடிப்புக்களை நாம் செய்தோமானால் அதுவே பல கோடிகளை நாட்டிற்குப் பெற்றுத் தரும்' என்று அவர் சொன்னார்.

பிலிம் தொழிலைப்பற்றி அமைச்சர் குறிப்பிடுகையில் தெரிவித்ததாவது:—

"நமது நாடு உள்ள சூழ்நிலையில் பொதுமக்களுக்குப் பொருள் அறிவு ஏற்படச் செய்யத் திரைப் படத்தைவிடச் சிறந்த சாதனம் வேறெதுவும் இல்லை.

வருங்காலத்தில் கல்வித் துறையில்கூடப் பூகோளம், விஞ்ஞானம், கணக்குக்கூட ஒளிப்படத்தின்மூலம் கற்பிப்பது மிகவும் பயன் தரக்கூடியதாக இருக்கும்.

திரைப் படத்தையும், டெலிவிஷனையும் நாம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் பயன்படுத்திக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது நாடு அதி விரைவில் முன்னேறும்."

சிறந்த டிப்ளமா பிலிமுக்கு 'ரோலிங் ஷீல்டு' பரிசு அளித்து தென்னிந்தியத் திரைப் பட ஸ்டுடியோ சங்கத்தின் தலைவர் ஏ. வி. மெய்யப்பன் பேசுகையில், மேற்படி தொழில் நுட்பப் பள்ளியில் மாணவர்களுக்கு, டைரக்ஷன் -- கதை எழுதுதல் -- திரைப் படத் படத்திற்கேற்றவாறு கதைக் கோர்வையை அமைத்தல் -- நடிப்பு ஆகிய துறைகளிலும் பயிற்சி அளிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த மாணவராகத் தேறும் மாணவருக்குத் தாம் ரூ. 1,2000 உதவிச் சம்பளம் வழங்குவதாக வாக்களித்தார்.

கல்லூரி முதல்வர் திரு. சிவதாணு பிள்ளை அனைவரையும் வரவேற்றார்; 'பயிற்சி முடிந்து செல்லும் மாணவர்களுக்கு அஞ்சல் மூலம் நற்சான்றிதழ் வழங்காது பட்டமளிப்பு விழா முறையில் இவ்விழா நடத்தப்படுவது இதுவே முதல் தடவை' என அவர்கூறினார்.

வியாபாரிகளின் சட்ட விரோதச் செயல்

போலீசு கமிஷனர் எச்சரிக்கை

அனுமதியின்றி பரிசுச் சீட்டு நடத்தினால் வழக்குத் தொடரப்படும்

சென்னை, டிச. 21—

"ரேடியோக்கள், டிரான்சிஸ்டர்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற பல்வேறு சாமான்களுக்காக அரசின் அனுமதியில்லாமல் தனியார் வியாபார நிறுவனங்கள் பரிசுச் சீட்டுகள் நடத்துவது குற்றமாகும்.

"அரசின் அனுமதியில்லாமல் பரிசுச் சீட்டுக்களை நடத்துபவர்கள்மீது வழக்குத் தொடரப்படும்"

என்று போலீசுக் கமிஷனர் வி. குப்புசாமி, செய்தியாளர்களிடம் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தங்கள் பரிசுச் சீட்டுத் திட்டத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு மோட்டார் சைக்கிள், ரேடியோக்கள் முதலியவை கொடுப்பதாகவும், குலுக்கலில் வெற்றி பெறுபவர்கள் பாக்கித் தவணைகளைச் செலுத்தவேண்டியதில்லை என்றும் அறிவித்துப் பரிசுச் சீட்டுகளில் சேரும்படி அண்மையில் பல நிறுவனங்களும், ஏஜெண்டுகளும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருக்கின்றனர்; இவையெல்லாம் 'லாட்டரி'தான்; அரசின் அனுமதியின்றி இப்படி நடத்தமுடியாது

இத்தகைய பரிசுத் திட்டங்கள் பற்றி விளம்பரம் செய்துள்ள நிறுவனங்களுக்கு இம்மாதிரி ஒப்புதல் இல்லாத 'லாட்டரி'கள் நடத்துவது சட்ட விரோதமானது என்று தெரியாமலிருக்கலாம்; இம்மாதிரி விளம்பரம் செய்தாலே, விளம்பரம் செய்பவர்கள் இ. பி கோ. 294 (ஏ) பிரிவின்கீழ் நடவடிக்கை எடுப்பதற்கு உரியவர்களாகின்றனர். இனி இம்மாதிரி ஒப்புதல் இல்லாத 'லாட்டரி'ச் சீட்டுகளை நடத்தக் கூடாது. தொடர்ந்து நடத்தினால், இ. பி. கோ. 294 (ஏ) பிரிவின்கீழ் வழக்குத் தொடரப்படும்."

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில, 'இத்தகைய விளம்பரங்களை வெளியிடும் பத்திரிகைகள் மீதும் வழக்குத் தொடரப்படலாம்' என்றார்.

ஒரு வாரம் பார்த்துவிட்டு, இம்மாதிரி ஒப்புதல் இல்லாமல் 'லாட்டரி'களை நடத்துபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் போகிறோம்" என்றும் அவர் சொன்னார்.

உணவு உற்பத்திக்கு ஊக்கம்

இந்திய அரசு நடவடிக்கை

"அதிக விளைச்சல் தரும் ரக நெல் கோதுமை, மற்றும் ஏனைய தானியங்கள் சாகுபடியின்கீழ், 1971-ல், 2.1 கோடி ஏக்கர் நிலத்தைக் கொண்டுவர அரசு திட்டமிட்டிருக்கிறது.

"அடுத்த சில ஆண்டுகளில் உணவுத் துறையில் நாடு தன்னிறைவு பெறும் பொருட்டு விவசாயிகளுக்கு சிறந்த ரக விதைகள் வழங்கவும் அரசு திட்டமிட்டிருக்கிறது"

என்று, மாநிலங்களவையில், உணவு--விவசாயத் துணையமைச்சர் அண்ணாசாகிப் பி. ஷிந்தே தெரிவித்தார்.

நாமக்கல் வட்ட கழகத்தோழர்கட்கு:

"டிசம்பர் 30-ம் நாளுக்குள் நாமக்கல் வட்ட தி.மு.க. சார்பில் அறிஞர் அண்ணா அவர்களின் சிகிச்சை நிதிக்கு ரூ. 5,000 அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது; பொருளாளர் கருணாநிதி அவர்களை அழைத்து நிதி கொடுக்க ஏற்பாடுகள் நடக்கின்றன; ஆகவே நாமக்கல் வட்டத்திலுள்ள கழகத் தோழர்கள் -- ஆதரவாளர்கள் -- பொதுமக்கள் ஆகியோர், 'இராமதாசு, வட்ட தி.மு.க. பொருளாளர், வரகூர், நாமக்கல் வட்டம்' என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்ப வேண்டுகிறேன்"

என நாமக்கல் வட்ட தி மு க. செயலாளர் மு. பழனிவேலன் வேண்டுகிறார்.

முத்தரசுநல்லூரில் குழந்தைகள் காப்பகம் திறப்பு

11—12—68-ல் முத்தரசநல்லூரில், அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் காப்பகத்தை அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. ஏ. ஓ. மங்கான் அம்பலக்காரர் தலைமையில் கோட்டாட்சியாளர் எல். சூரியநாராயணன் திறந்து வைத்தார்.

அவ்வமயம் முத்தரசநல்லூர் ஊராட்சி ஒன்றிய உயர் துவக்கப் பள்ளிக் குழந்தைகளின் கலா நிகழ்ச்சிகளோடு, திருச்சி மாவட்ட மகளிர் நல குழுவின் தலைவி திருமதி கமலாவதி கருணாநிதி, வள்ளுவர் படத்தைக் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றினர்கள்.

பூங்கா நகரம் — 60 ஆண்டுகள் முன்பே திட்டமிட்டு உருவானது

ஜாம்ஷெட்பூர்: வண்ணமலர்சோலைகள் மிகுந்தது, எஃகு நகரமென அழைக்கப்படும் ஜாம்ஷெட்பூர். உண்மை! இந்தியாவின் எழில் மிகு நகரங்களில் அதுவும் ஒன்று. மேனாட்டில் திட்டமிட்ட நகரநிர்மாணங்கள் சர்வசாதாரணம். ஆயினும், அதனினும் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே ஜாம்ஷெட்பூர் திட்டமிட்டு உருவானதென்பது வியப்பேயாகும்.



சோனாரி— திருத்தியமைக்கப்பட்ட குடியிருப்பு. பல கட்டங்களில் திட்டமிட்டு, 20 குப்பங்களை, நல்ல வெளிச்சமுள்ள சாலைகள், போதுமான தண்ணீர் வசதிகளுடன் சிறந்த குடியிருப்புகளாக மாற்றியமைக்க டாடா ஸ்டீல் உதவி செய்துள்ளது.



டாடா பெரிய மருத்துவமனை: சகல வசதிகளுடன் 600 படுக்கைகள் பெற்றது இந்த மருத்துவமனை. தவிர 82 படுக்கைகளுடன் ஒரு காசநோய் மருத்துவமனையும் அதில் ஒரு குழந்தைகள் வார்டும் அமைக்க டாடா ஸ்டீல் உதவியுள்ளது.



ஜூபிலி பூங்கா: "மனிதர்களுக்கும், அவர் உணர்ச்சிகளுக்குமான அடிப்படைத் தேவையை, எஃகு, இரும்பைக்காட்டிலும், மலர்களும் பூங்காக்களும், மரங்களும் பூர்த்தி செய்கின்றன என்று நான் கருதுகிறேன். அந்த சிறந்த சிந்தனையின் தோற்றமே இப்பூங்கா."

—ஜவாஹர்லால் நேரு

எஃகும், மக்களுமே எங்கள் பலம்

டாடா ஸ்டீல்

TN-413

தமிழக--கேரள முதல்வர்கள் சந்திப்பு

நதி நீர்ப் பங்கிடு முறையில் சுமூகமான முறையில் பேச்சுவார்த்தை

'மீண்டும் சந்தித்துப் பேசுவர்' எனத் தகவல்

சென்னை, டிச. 23—

தமிழகத்திற்கும் -- கேரளத்திற்கும் இடையில் உள்ள நதி நீரைப் பங்கிடும் துறையில் நிலவிவரும் பிரச்சினைகள்பற்றி, இரு மாநில முதலமைசசர்களும் பிப்ரவரித் திங்கள் மத்தியில், மூன்ருவது முறையாகச் சந்தித்துப் பேசுவர்; இதற்கிடையில், இந்தப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட விவரங்களை வகுக்குமாறு இரு மாநிலங்களின் அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

நதி நீரைப் பகிர்ந்துகொள்வது பற்றி தமிழக -- கேரள அரசுகளுக்கிடையே டிச. 21-ம் நாள், தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

தமிழக அரசுச் சார்பில் முதலமைச்சர் அண்ணா, அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கேரள அரசுச் சார்பில் முதலமைச்சர் நம்பூதிரிபாடு, மின்சாரத் துறை அமைச்சர் கோவிந்தன் நாயர், மராமத்துத் துறை அமைச்சர் குரூப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மத்திய அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கே. எல். ராவ் அவர்களும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டார்.

கூட்டம் முடிந்தபின், மத்திய அமைச்சர் கே. எல். ராவ், செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"இன்றையப் பேச்சுவார்த்தை, சுமூகமான சூழ்நிலையில் நடைபெற்றது; அடுத்த சந்திப்பில் இறுதி முடிவும் இதேபோன்று சுமூகமான முறையில் எடுக்கப்பட்டுவிடும்; இந்தச் சந்திப்பு, தமிழக முதலமைச்சரின் வசதியைப் பொறுத்துத் திருவனந்தபுரத்திலோ அல்லது சென்னையிலோ நடைபெறலாம்.

"பரம்பிக்குளம் -- ஆளியாறு திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் தண்ணீர் முழுவதும் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும்; ஆனல், எந்தெந்த இடத்திலிருந்து அந்தத் தண்ணீரை எடுப்பது என்பதுபற்றித்தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது."

நிருபர்:—"தேக்கடி அணை கட்டுவதற்குத் தமிழ்நாட்டிற்குக் கேரளத்தின் ஒப்புதல் கிடைக்குமா?"

அமைச்சர் ராவ்:—"தமிழ்நாடு கட்டத் திட்டமிட்டிருப்பது, ஓர் அணையன்று -- மூன்று அணைகளாகும்; ஆனல், அணைகளின் எண்ணிக்கையைக் குறைத்து -- அதே நேரத்தில், மூன்று அணைகளால் ஏற்படக்கூடிய பலன் கிடைக்கச் செய்ய இயலுமா என்பதுபற்றி ஆய்வு செய்யப்பட்டுவருகிறது."

'பிரச்னைகள் தீரும்'

கேரள அமைச்சர் நம்பிக்கை

கள்ளிக்கோட்டை, டிச. 23—

"இரு மாநிலங்களுக்கிடையேயும் நீரைப் பகிர்ந்துகொள்வதுபற்றி சென்னையில் தமிழ்நாடு -- கேரள அமைச்சர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகள், நிச்சயமாகப் பிரச்சினையைத் தீர்க்க உதவும்"

என்று கேரள நீர்ப்பாசன அமைச்சர் பி. ஆர். குரூப் நம்பிக்கை தெரிவித்தார்.

நகராட்சித் தேர்தல்

தஞ்சை மாவட்ட ஆய்வுக் குழு சுற்றுப்பயணம்

டிச. 24 காலை 10 மனி: பட்டுக்கோட்டை; 25 காலை 10 மணி: கும்பகோணம்; 26 காலை 10 மணி: தஞ்சாவூர்; 27 காலை 10 மணி: மாயவரம்; 28 காலை 10 மணி: திருவாரூர்; 29 காலை 10 மணி: நாகை; 30 காலை 10 மணி: மன்னார்குடி.

ஆய்வுக் குழுவில் இடம் பெறுவோர்:—மாவட்டச் செயலாளர், மாவட்ட அவைத் தலைவர் வை. சுப்பிரமணியம், மாவட்டத் துணைச் செயலாளர், அறந்தாங்கி இரா. இராசன், மாவட்டப் பொருளாளர் எஸ். தங்கவேலு.

"ஆய்வுக் குழுவினருடன், அந்தந்த வட்டச் செயலாளர்களும், நகரச் செயலாளர்களும் ஒத்துழைப்புத் தர அன்புடன் வேண்டுகிறேன்"

என, மாவட்டச் செயலாளர் மன்னை ப. நாராயணன் அறிவிக்கிருர்.

திருத்தணி தி. மு. க.

"திருத்தணி பேரூர் தி. மு. க. கிளையின் தேர்தல் 29—12—68 ஞாயிறு காலை 10-மணிக்கு திருத்தணி பயணியர் விடுதியில் நடைபெறும்"

என்று, திருத்தணி வட்டச் செயலாளர் ஆ. பரந்தாமன் அறிவிக்கிருர்.

அறிஞர் அண்ணா

சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

	ரூ. காசு
21-12-68 இதழ்த் தொடர்ச்சி	1,31,449.53
வி. தங்கபாண்டியன் எம்.எல்.சி.	250.00
காஞ்சி நகராட்சித் தலைவர் அ. க. தங்கவேலர்	250.00
நடுவூர்க்குப்பம் (பழவேற்காடு) எஸ். ஜோசப்	15.00
மேல்மலையனூர் தொகுதி ஆர். ஆர். முனுசாமி எம்.எல்.ஏ.	101.00
சென்னை 57-வது வட்டம் திருவள்ளுவர் மன்றம் த. கா. பால்ராசன்	5.10
சென்னை 58-வது வட்டம் இரா. காங்கேயன்	5.10
சிதம்பரம் பொதுக்குழு உறுப்பினர் பொன். சொக்கலிங்கம்	33.00
சிதம்பரத்தில் 19—12—68-ல் நடைபெற்ற டாக்டர் அண்ணா மன்றத் துவக்க விழாவில் துண்டேந்தி வசூல்—பரம. நடேசன் மூலம்	68.00
மதுரை-1 பி. சுப்புராம்	25.00
பொள்ளாச்சி பி. என். பரமசிவம் (துணைத் தலைவர், கதர் போர்டு)	1,001.00
நாகர்கோவில் எஸ். அருணசல முதலியார்	51.00
ஆலங்குளம் தொகுதி ஆலடி அருணா எம்.எல்.ஏ.	250 00
சென்னை-7 நண்பர்கள் கழகம் மூலம்	401.00
நாடியம் எஸ். இராமையன்	100.00
ஆக மொத்தம்	1,34,004.73

புதுவை வாக்காளர்கட்கு நன்றியறிவிப்பு

"அண்மையில் நடந்து முடிந்த புதுவை மாநில நகராட்சித் தேர்தல்களில், தி. மு. க.—கூட்டணி வேட்பாளர்கட்கு பெருவாரியாக வாக்களித்து மகத்தான வெற்றி தேடித்தந்த வாக்காளப் பெருமக்களுக்கும், உடனிருந்து உழைத்த கழக -- தோழமைக் கட்சிகளின் தொண்டர்கட்கும், மாவட்டக் கழகச் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று புதுவை மாவட்ட தி. மு. க. செயலாளர் எம். ஏ. சண்முகம் அறிவிக்கிருர்.

கருநாடக மாநில தி. மு. க. கிளைகளுக்கு

அமைப்பாளர் வேண்டுகோள்

★

"கருநாடக மாநிலத்தில். தலைமைக் கழக ஆணைக்கிணங்க கடந்த மே திங்கள் 19-ஆம் நாள் கிளைக் கழகத் தேர்தல்கள் நடைபெற்றன; அன்றிலிருந்து இன்றுவரை நிர்வாகப் பொறுப்பிலிருந்து இராஜினாமாச் செய்தவர்கள் இருப்பின் சம்பந்தப்பட்ட கிளையின் செயலாளர்கள், அந்த இராஜினாமாவின் நகல்களை மாநில அமைப்பாளருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். அந்தப் பொறுப்புக்களுக்கான இடைத் தேர்தல்கள் சனவரி 12-ஆம் நாள் காலைமுதல் மாலை வரை நடைபெறும்; இடம், நேரம், ஆணையாளர்கள் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்"

என்று கருநாடக மாநில அமைப்பாளர் தி. திராவிடமணி அறிவிக்கிருர்.

நகராட்சித் தேர்தல்

கரூருக்கு ஆய்வுக் குழு வருகை

"திருச்சி மாவட்ட தி. மு. க. செயலாளர் அறிக்கைப்படி, கரூர் நகர மன்றத் தேர்தல் வேட்பாளர் ஆய்வுக்காக திருச்சி மாவட்ட ஆய்வுக் குழு டிச. 25, 26 ஆகிய நாட்களில் கரூர் பயணிகள் விடுதியில் தங்கி வேட்பு மனுக்களைப் பெற்றுக்கொள்ளும்; ஆகவே, நகர் மன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பும் கழகத் தோழர்கள், தங்களது வேட்பு மனுக்களை ஆய்வுக் குழுவிடம் கொடுத்துத் தங்களது கருத்தையும் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

"வேட்பு மனு ஆய்வுக் குழுவிடம் கிடைக்கும். வேட்பு மனுக் கட்டணம் ரூ. 25 செலுத்த வேண்டும் என்பதையும், வேட்பாளர்கள் ஆய்வுக் குழுவைச் சந்திப்பதற்காக தங்களுடைய ஆதரவாளர்களை அழைத்துவர வேண்டாம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்"

என்று கரூர் நகர தி. மு. க. செயலாளர் என். ஆர். இராமசாமி அறிவிக்கிருர்.

சி. தமிழரசி அறிவிப்பு

"டிசம்பர் 27-ம் நாள் முதல் சன. 8-ம் நாள் முடிய நாகர்கோவில் தேர்தலில் நான் பணியாற்ற வேண்டியிருப்பதால் அந்த நாட்களில் ஏற்கனவே நான் ஒப்புக்கொண்டிருக்கின்ற கூட்டங்களை ஏற்பாடு செய்திருக்கிற தோழர்கள் அவைகளை ஒத்திவைக்குமாறு வேண்டுகிறேன்; மாற்றுத் தேதிகளை விரைவில் அறிவிப்பேன்"

எனத் தோழியர் சி. தமிழரசி பி.ஏ. அறிவிக்கிருர்.

பரம்பரைப் பெருமையை காவாது விட்டுவிடுவோமானல் பெரும் தவறிழைத்தவர்களாவோம்!

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் செழிக்க வகை செய்தல் வேண்டும்

சென்னை, டிச. 21—

"தாயினும் இனிய நம் தமிழ் மொழி பட்டிதொட்டிகளில் தொடங்கி அரசுவரை பரவி நின்று முழங்கும் இந்த எழிலார்ந்த நேரத்தில், முத்தமிழின் ஓர் உறுப்பாகிய இசைத் தமிழ் தனக்குரிய இடத்தைப் பெற்று நம் ஊனோடு ஊனாய் -- உயிரோடு உயிராய்க் கலந்து நிற்கும் நிலையினைக் காண்கிறோம்.

"இசைத் தமிழ் இத்தகைய வளர்ச்சியை -- இந்த மறுமலர்ச்சியைப் பெறுமாறு அதை ஊக்குவதில் தமிழ் இசைச் சங் சங்கம் ஆற்றியுள்ள -- நாளும் ஆற்றிவரும் பணி குறித்துத் தமிழர்களாகிய நாம் அனைவரும் பெருமையடைகிறோம்.

"தமிழ் இசை என்பது ஒரு சிலர் கருதுவதுபோல் ஏதோ புதிதாக நேற்று வந்ததோர் இயக்கம் என்று தயைகூர்ந்து யாரும் நினைத்துவிட வேண்டாம். கல் தோன்றி மண் தோன்ருத காலத்தில் இருந்தே இத்தமிழ் மொழி 'முத்தமிழ்' என்ற பெயரையும் பெற்று, அம்மூன்றுள் ஒன்ருக இசைத் தமிழை வளர்த்து வந்திருக்கிறது. தமிழ் மொழி உள்ளளவும் தமிழருடைய இசைத் தமிழை அறிவதற்குச் சிலப்பதிகார அரங்கேற்ற காதை உறுதுணையாக இருந்து வருகிறது.

"இசைத் தமிழில் மட்டுமல்லாமல் நாடகத் தமிழிலும் நம் முன்னோர் ஒப்பற்ற நிலையை எய்தியிருந்தனர் என்பதை அறிதல் வேண்டும்.

"இத்துணைப் பெரிய பரம்பரையில் வந்தவர்கள் ஆகிய நாம், நம் பரம்பரைப் பெருமையைக் காவாது விட்டுவிடுவோமேயாயின், பெரும் தவறு இழைத்தவர்கள் ஆவோம்.

"தமிழ் மக்கள் தம்முடைய மொழி, கலை ஆகிய அனைத்தையும் இயற்கை பொருந்தவே வளர்த்தார்கள் என்ருல், அது மிகையாகாது.

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் செழிக்கும் வகை செய்வதானல் அதற்குரிய முதல்படி இத்தமிழ் இசை தமிழ் நாடு முழுவதிலுமாவது செழிக்கும் வகை செய்தல் வேண்டும்.

"தமிழருடைய இலக்கியம், இசை, நாடகம், என்ற மூன்றும் ஏதோ ஒரு சிலருக்கே உரிய மறை பொருளாக இல்லாமல் மக்கள் மன்றத்திலே வரவேண்டியது இன்றியமையாத ஒன்ருகும்.

"தமிழிசை என்று கூறும் காரணத்தாலே வேற்றுமொழி இசைக்கு விரோதம் என்பது அல்ல. தமிழிசை என்று கூறுவதால் தெலுங்கிசைக்கு விரோதிகளாகிவிட மாட்டோம். தமிழ்மேல் உள்ள ஆர்வம் காரணமாகத் தமிழிசை என்று வழங்குகிறோம். தெலுங்குமீது நமக்கு விரோதம் இல்லை என்று சொல்லும் பொருட்டுத்தான் தமிழிசை நடைபெறும் இந்த அரங்கிற்கு அருகே ஆந்திரத்தைத் தாய் மொழியாகக் கொண்ட பிரகாசம் அவர்களின் சிலையைத் திறந்து வைத்திருக்கிறோம். அதனல் ஒரு மொழி மீது வெறுப்புக் காட்டுகிறோம் என்பதல்ல; நம் மொழிமீது விருப்புக் காட்டுகிறோம் என்பதே பொருள்."

--மு. கருணாநிதி

(தமிழிசைச் சங்க விழாவில்

குழுக் கூட்டங்கள்

"திருவள்ளூர் நகர தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம், 24—12—68 பகல் 1-மணிக்கு திருவள்ளூர் வடக்கு இராச வீதி செகதீசுவரி திருமண மண்டபத்தில், மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி -- வட்டச் செயலாளர் து. எத்திராசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்"

என்று நகரச் செயலாளர் டி. சி. செல்வராசன் அறிவிக்கிருர்.

நடக்க இருப்பவை

24--12--68

பெண்ணாடம்

கலைஞர் மன்றத் திறப்பு விழா; மாலை 6 மணிக்கு வானொலித் திடலில்; தலைவர்: வீ. இராமசாமி; திறப்பாளர்: காட்டூர் கோபால்; வரவேற்புரை: பி. கிருட்டினன்; பேசுவோர்: எஸ். இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., எம். செல்வராசு, டி. இராசவேலு, பி. பத்மநாபன்.

பொன்மலை ஜி. பராங்குசம்

எம்.எல்.சி. சுற்றுப்பயணம்

டிச. 24: மணப்பாறை; 25, 26: கரூர்; 29: திருவரங்கம்; 30, 31: திருச்சி. சன. 2 முதல் 8-வரை: நாகர்கோவில் தொகுதி.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கப் பயணம் செய்பவர்கள், இந்த மூன்று விண்வெளிவீரர்களே ஆவர்.

விண்வெளிக் கப்பல் 60,000 மைல் உயரத்தில் சென்றுகொண்டிருந்தபோது, இவர்கள் தூங்கச் சென்றனர்; ஆனல் கேப்டன் போர்மென் என்பவரால் தூங்க இயலவில்லை; உடனே தரையிலிருந்த கட்டுப்பாடு அதிகாரிகள், தூக்க மாத்திரை சாப்பிடுமாறு அவருக்கு உத்தரவிட்டனர்; 6 நாட்கள் நீடிக்கும் 4,80,000 மைல் பயணத்தில் இவர்கள் தூங்கியது இதுதான் முதல் தடவையாகும்.

இதற்குமுன் அவர்கள் முதன் முதலாக இறைச்சித் துண்டு, கேக், திராட்சை ரசம் ஆகியவற்றை உணவாக அருந்தினர்.

செவ்வாயன்று மாலை 3-30 மணிக்கு இந்த விண்வெளிக் கப்பல், சந்திரனைச் சுற்றத் துவங்கும். சந்திரனைப் பத்து முறை சுற்றி வந்து போட்டோ, டெலிவிஷன் படங்களை விண்வெளி விமானிகள் எடுப்பர்.

இந்த விண்வெளிக் கப்பல் சந்திர மண்டலத்தைச் சுற்றத் தொடங்கும் பாதையில் புகும் போதோ, அல்லது அங்கிருந்து திரும்பும்போதோ ஏதாவது கோளாறு நேர்ந்துவிட்டால் அந்தக் கப்பல் சந்திரனிலாவது வீழ்ந்துவிடும்; அல்லது விண்வெளியில் திரும்பிவர இயலாதவாறு அலைய நேரிடும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13. [illegible]